# இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.6.M

எண்கள் - மீ.பெ.கா (HCF) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் III

## எண்கள் - மீ.பெ.கா (HCF) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் III

சேந்தன் தனது கிராமத்தில் ஒரு பால் பண்ணை வைத்திருக்கிறார். அதில் சேகரிக்கும் பாலை, மொத்தமாக எடுத்துச்சென்று அருகிலிருக்கும் நகரத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் குடும்பங்களுக்கு விற்று லாபம் ஈட்டிவந்தார். அக்குடும்பங்களின் தேவையைப் பொருத்து, அவர்கள் வாங்கும் பாலின் அளவு நான்கு விதமாக அமைந்திருந்தது. 1200 மி.லி, 1500 மி.லி, 2400 மி.லி. மற்றும் 4200 மி.லி. எந்த அளவுள்ள ஒரே ஒரு உழக்கை எடுத்துச்சென்றால் சேந்தனால் எல்லா வீட்டிற்கும் பால் வினியோகம் செய்ய இயலும்?

அடுக்கு மாடிக்குடியிருப்பில் உள்ள வாடிக்கையாளர்கள் தினமும் வாங்கும் பாலின் அளவு = 1200 மி.லி, 1500 மி.லி, 2400 மி.லி மற்றும் 4200 மி.லி

இந்த எண்ணிக்கைகளுக்கு இடையே உள்ள மீ.பெ.கா-வை கண்டு பிடித்தால் சேந்தன் கொண்டுவரவேண்டிய உழக்கின் அளவை, நமக்குக் கிடைத்துவிடும். =

$\textcircled{2} \times \textcircled{2} \times \textcircled{5} \times \textcircled{5} \times \textcircled{3} \times 2 \times 2 = 1200$

$\textcircled{2} \times \textcircled{2} \times \textcircled{5} \times \textcircled{5} \times \textcircled{3} \times 5 = 1500$

$\textcircled{2} \times \textcircled{2} \times \textcircled{5} \times \textcircled{5} \times \textcircled{3} \times 2 \times 2 \times 2 = 2400$

$\textcircled{2} \times \textcircled{2} \times \textcircled{5} \times \textcircled{5} \times \textcircled{3} \times 7 \times 2 = 4200$

மீ.பெ.கா(1200,1500,2400,4200) $= 2 \times 2 \times 5 \times 5 \times 3 = 300$

சேந்தன் கொண்டு செல்ல வேண்டிய ஒரே உழக்கின் அளவை $= (2 \times 2 \times 5 \times 5 \times 3) =$ **300 மி.லி** ஆகும்.

Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 10:53 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.